மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே என்னுடைய பதிலில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. எனவே, தொடர்ந்து அதுகுறித்து நெடுஞ்சாலைத் துறை பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

30—

விடுதி வசதி

***29192—திரு. எம். பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஆதி திராவிடர் மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு விடுதி துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கின்றேன்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளில் 50 புதிய மாணவர்கள் விடுதிகளைத் துவக்குவதற்கு ஆணையிட்டுள்ளார்கள். அதன் அடிப்படையில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய சீர்காழி தொகுதியில் மாதாணத்தில் புதிய மாணவர்கள் விடுதி துவக்குவதற்கு நமது முதல்வர் அவர்களால் ஆணையிடப்பட்டுள்ளது. இந்நிலையில் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சீர்காழி தொகுதியில் திருமுல்லைவாசலில் மாணவர்கள் விடுதி வேண்டும் என்று வினா எழுப்பியுள்ளார்கள். தற்போது அங்கு மாணவர்கள் விடுதி துவக்குவதற்கு வாய்ப்புகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.

2008 நவம்பர் 13]

திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு ஆதி திராவிடர் நலத் துறையின்மூலம் இயக்கப்படும் மாதாணம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு ஒரு விடுதியைத் துவக்குவதற்கு அனுமதியளித்திருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

சீர்காழி தொகுதியிலே இருக்கக்கூடிய திருமுல்லைவாசல் அரசு மேல்நிலைப் பள்ளியில் சுமார் 1,000 மாணவர்கள் படித்து வருகிறார்கள். இந்த ஆண்டு நடைபெற்ற 10 ஆம் வகுப்புத் தேர்வில் 91 சதவிகிதமும் 12 ஆம் வகுப்புத் தேர்வில் 72 சதவிகிதமும் தேர்ச்சி பெற்று மாணவர்கள் வெற்றி அடைந்திருக்கிறார்கள். அங்கே பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்மூலம் ஒரு பெண்கள் விடுதி நடத்தப்படுகிறது. அது முழுமையாக, கிராமப்புறத்திலே அமைந்திருக்கிற மேல்நிலைப் பள்ளியாக இருப்பதால் மாணவர்கள் தங்கிப் படிக்கக்கூடிய அளவிற்கு, இந்த ஆண்டு மாணவர்களுக்குப் பயன்படுகிற விதத்திலே, ஆதி திராவிடர் நலத் துறையின்மூலம் புதிய விடுதியைத் துவக்கிக் கொடுப்பதற்கு அமைச்சர் மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கைக்கு ஏற்பதான், விடுதிகள் எங்கெங்கு வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பிறகுதான், மாதாணத்தில் நடப்பு ஆண்டில் விடுதி தொடங்குவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும் சீர்காழி தொகுதியிலே, திருமுல்லைவாசலிலே விடுதி வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளார்கள். நடப்பாண்டில் தொடங்குவதற்கு வாய்ப்புகள் இல்லை. எதிர்காலத்தில் தேவை மற்றும் முக்கியத்துவத்தின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.